| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| தண்.வசுந்தராதேவி,<br>எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி<br>அலுவலர்கள் மற்றும்<br>இணை இயக்குநர் (கல்வி) புதுச்சேரி |

ந.க.எண்.060952/ எப்1 / 2019 நாள் : 15.05.2019

ஐயா/அம்மையீர்,

**பொருள் :** மேல்நிலை முதலாமாண்டு சிறப்புத் துணை தேர்வு ஜூன் 2019 – "சிறப்பு அனுமதி திட்டத்தின்" கீழ் (Tatkal) தேர்வர்கள் முதன்மைக் கல்வி அலுவலகங்கள் மூலம் ஆன்–லைனில் விண்ணப்பித்தல் – அறிவுரை வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை :** இவ்வலுவலக செய்திக்குறிப்பு, நாள். 15.05.2019.

------

நடைபெற்ற மார்ச் 2019, மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வில் தோல்வியுற்ற/ வருகைபுரியாத தேர்வர்களுக்கு 14.06.2019–ல் தொடங்கி 21.06.2019 வரை நடைபெறவுள்ள ஜூன் 2019, மேல்நிலை முதலாமாண்டு சிறப்புத் துணைத் தேர்விற்கு ஆன்–லைன் மூலம் விண்ணப்பிப்பதற்கு 10.05.2019 முதல் 14.05.2019 வரை பள்ளிகள்/தேர்வு மையங்களுக்குச் சென்று பதிவு செய்யுமாறு தேர்வர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அவ்வாறு அறிவிக்கப்பட்ட நாட்களில் பள்ளிகள்/ தேர்வு மையங்களுக்குச் சென்று விண்ணப்பிக்கத் தவறியவர்களுக்கு தற்பொழுது சிறப்பு அனுமதி திட்டத்தின் கீழ் (Tatkal) 16.05.2019 (முற்பகல்) மற்றும் 17.05.2019 ஆகிய இரு நாட்களில் முதன்மைக் கல்வி அலுவலகங்களுக்குச் சென்று விண்ணப்பிக்க பார்வை 1ல் குறிப்பிட்டுள்ள செய்திக்குறிப்பின் மூலம் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட நாட்களில் விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர்கள் முதன்மைக் கல்வி அலுவலகங்களுக்கு வருகைபுரிவார்கள். அவ்வாறு வருகைபுரிவோருக்குக் கீழ்க்கண்டவாறு ஆன்–லைன் மூலம் விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்யுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. 16.05.2019 காலை முதல் தேர்வர்கள் முதன்மைக் கல்வி அலுவலகங்களுக்கு வருகைபுரிவார்கள். அவ்வாறு வருகைபுரிவோரிடம் அவர்கள் மார்ச் 2019 மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வின் நுழைவுச் சீட்டினையோ (Hall Ticket) அல்லது மதிப்பெண் பட்டியலையோ (Statement of marks) ஆய்வு செய்து www.dge.tn.gov.in என்ற வலைதளத்தில் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி, தேர்வர்களின் விண்ணப்பங்களை அப்பொழுதே ஆன்–லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

**2. விண்ணப்பங்களை பதிவு செய்யும் பொழுது, செய்முறைத் தேர்வு உள்ள பாடங்களுக்கு விண்ணப்பிக்கும் தேர்வர்களுக்கு கீழ்க்கண்ட குறிப்புகளை தவறாது தெரிவிக்க வேண்டும்.**

i. மார்ச் **2019**, மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வின்போது செய்முறைத் தேர்வில் பங்கேற்காமல் (வருகை புரியாதோர்), எழுத்துத் தேர்வில் மட்டும் பங்கேற்று, எழுத்துத் தேர்வு மற்றும் அகமதிப்பீட்டில் மொத்தம் 35 மற்றும் அதற்கும் மேல் மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறாத தேர்வர்கள், உடனடி சிறப்புத் துணைத் தேர்வின்போது **செய்முறைத் தேர்வில் மட்டும் பங்கேற்றால் போதுமானது**. அத்தேர்வர்கள் எழுத்துத் தேர்வினை மீண்டும் எழுத இயலாது.

ii. செய்முறைத் தேர்வில் பங்கேற்காமல் (வருகை புரியாதோர்), எழுத்துத் தேர்வில் மட்டும் பங்கேற்று, எழுத்துத் தேர்வு மற்றும் அக மதிப்பீட்டில் மொத்தம் 35 மதிப்பெண்களுக்கும் குறைவான மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறாத தேர்வர்கள், உடனடி சிறப்புத் துணைத் தேர்வின் போது எழுத்துத் தேர்வு மற்றும் செய்முறைத் தேர்வு ஆகிய இரண்டிலும் பங்கேற்க வேண்டும்.

iii. செய்முறை மற்றும் எழுத்துத் தேர்வுகளில் பங்கேற்று தேர்ச்சி பெறாத தேர்வர்கள், எழுத்துத் தேர்வினை மட்டும் எழுதினால் போதுமானது. அத்தேர்வர்கள் மீண்டும் செய்முறைத் தேர்வு செய்ய வேண்டியதில்லை.

3.
| | | |
|---|---|---|
| தேர்வுக் கட்டணம் (ஒரு பாடத்திற்கு) | – | ரூ. 50/– |
| இதரக் கட்டணம் | – | ரூ. 35/– |
| ஆன்–லைன் பதிவுக் கட்டணம் | – | ரூ. 50/– |
| சிறப்பு அனுமதி (தட்கல்) கட்டணம் | – | ரூ.1000/– |

4. விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவேற்றம் செய்தல் தொடர்பாக ஏதேனும் ஐயங்கள் எழுமாயின், **8012594127** என்ற கைபேசி எண்ணை தொடர்பு கொள்ள வேண்டும்.

5. முதன்மைக் கல்வி அலுவலகங்களில் விண்ணப்பங்கள் பெறப்படுவதற்கு **17.05.2019** அன்று கடைசி நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தினங்களுக்குள் தேர்வகளிடமிருந்து பெறப்படும் தேர்வுக் கட்டணத்தொகையை (தேர்வுக் கட்டணம், இதரக் கட்டணம் மற்றும் சிறப்பு அனுமதி (தட்கல்) கட்டணம்) தனியாகவும், ஆன்–லைன் பதிவுக்கட்டணமாக பெறப்பட்ட தொகையினை (ஒவ்வொரு தேர்வரிடமிருந்து பெறப்படும் ரூ.50/–) தனியாகவும் **"Director of Government Examinations, Chennai–6"** என்ற பெயரில் தனித்தனியாக இரு வங்கி வரைவோலைகளாக எடுத்து, அவற்றுடன் Summary Report–ன் நகலினையும் இணைத்து 'திரு.க.திருநாவுக்கரசு, துணை இயக்குநர் (பொது), அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6' என்ற முகவரிக்கு பதிவஞ்சல் வழியாக 20.05.2019–க்குள் அனுப்பி வைத்திடுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலகர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஒம்./–**

**இயக்குநர்**

**நகல்**

**1.** அனைத்து அரசுத்தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.

**2.** அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.